# திருவள்ளுவர் சுட்டிய குடும்ப உணர்வுகள்

8

ம.பிரீடா

உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை,

ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி, அண்ணா நகர், சென்னை -40.

mfriedaskc@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

திருவள்ளுவர் தந்தை, தாய், பிள்ளைகள் என குடும்ப உணர்வுகளுக்கு முக்கியத்துவம் தருகிறார். குடும்பத்தில் தலைவன் எத்தகையவனாக இருக்க வேண்டும், தலைவி, பிள்ளைகளின் இயல்புகள், உணர்வுகள் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

குடும்பம் என்பது அனைத்து உணர்வுகளுக்கும் அடிப்படையாகவும் பிறப்பிடமாகவும் இருப்பதாகும். சாதாரண மனிதன் முதல் அரசன் வரை அனைவருக்கும் குடும்பம் என்ற உறவு(உணர்வு) பிணைப்பு உண்டு. மனிதனிடம் ஏற்படும் உணர்வுகளை உரிய முறையில் கையாள அவனைத் தயார்படுத்துவது குடும்பமாகும். திருவள்ளுவரின் குடும்ப உணர்வுகள் குறித்த கருத்துகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

உணர்வு, இல்லறம், உண்டி, அமிழ்தம், அளாவிய, சான்றோன்.

**முன்னுரை**

மனித வாழ்விற்கு அடித்தளமாக இருப்பது குடும்பம். சமூக வாழ்க்கைக்கு ஏற்றவனாக மனிதனை உருவாக்குவதில் குடும்பம் முக்கிய பங்கு வகிக்கிறது. உணர்வுகளால் கட்டி எழுப்பப்பெற்ற அழகிய மாளிகை தான் குடும்பம். தந்தை, தாய், பிள்ளைகள், தாத்தா, பாட்டி, உறவினர் என குடும்பத்தின் எல்லை பரந்து விரிந்தது. தெய்வப்புலவர் திருவள்ளுவரின் குடும்ப உணர்வு குறித்த கருத்துகள் இங்கு ஆராயப்படுகிறது.

**இல்லறம்**

ஒத்த அன்புடைய தலைவன் தலைவி திருமணம் செய்து இணைந்து வாழ்வது இல்லறமாகும். இதனைக் கற்பு வாழ்க்கை என்கிறது தமிழ் இலக்கணம். “இல்லறம் அல்லது நல்லறம் அன்று”[1] என்கிறார் தமிழ் மூதாட்டி ஔவையார். பிறர் பழிக்கு அஞ்சி நல்வழியில்

வாழ்வது இல்லறம் என்பதனை ‘அரண் எனப்பட்டதே இல்வாழ்க்கை’ என்ற குறளில் கூறுகிறார். இல்லறத்தில் வாழ்பவன் பெற்றோர், வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மூவருக்கும் துணையாக இருப்பவன் (கு.41) என்று கூறுகிறார். இல்லற வாழ்வில் ஆற்ற வேண்டிய கடமை உணர்வுகளை இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தில் விளக்குகிறார். அன்பு, பண்பு, விருந்தோம்பல், ஈகை, ஊடல், கூடல், விருப்பு, வெறுப்பு, தோழமை எனப் பல பண்புகளால் பிணைக்கப்பட்டுள்ளது குடும்பம். “நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்”[2] என்று பாரதிதாசன் தனது குடும்ப விளக்கு நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். அனைத்து உணர்வுகளுக்கும் பிறப்பிடமாகத் திகழ்வது குடும்பமாகும். பிறர்பழி, இன்னாசொல் போன்றவை தரும் உணர்வுகள் நம் குடும்ப உணர்வு நலன்களையே பாதிக்கிறது. இல்வாழ்க்கையானது அன்பும் அறனும் உடையதாக இருக்க வேண்டும் என்று (கு.45) அறிவுறுத்துகிறார்.

**விருந்தோம்பல்**

தமிழ்ப் பண்பாட்டின் மகுடமாக இருப்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பாகும். இப்பூவுலகில் வாழ்பவருக்கெல்லாம் “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”[3] என்று மணிமேகலை கூறுகிறது. பழங்கால வீடுகளில் வீட்டுத்திண்ணை அமைப்பதற்கான காரணமும் வறியவர், வழிப்போக்கர் தங்கி இளைப்பாறிச் செல்வதற்கே ஆகும். பண்டைத் தமிழர் விருந்தினருக்கு உணவளித்து அவர்களை வழியனுப்பிய பின் மேலும் யாராவது வருகிறார்களா? என எதிர்பார்த்து பின் உண்பர். இக்கருத்தினைத் திருவள்ளுவர் ‘செவ்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்’ என்ற குறள் மூலமாகக் கூறுகிறார்.

அமிழ்தமே கிடைத்தாலும் தான் மட்டும் உண்ண விரும்பாதவர்கள் என்பதனை 82 ஆவது திருக்குறளில் கூறுகிறார். மேலும் விருந்தினரைப் பேணுகின்றவர் வீட்டில் திருமகள் தங்கி இருப்பாள் என்று 84 ஆவது திருக்குறளில் கூறுகிறார். குடும்ப வாழ்வில் முக்கிய பங்கு வகிப்பது விருந்தோம்பல் ஆகும்.

**குடும்பத் தலைவன்**

குடும்பத் தலைவன் எத்தகைய இயல்புடையவனாக இருக்க வேண்டும் என்பதனை வள்ளுவர் பல இடங்களில் வலியுறுத்துகிறார். குடும்பத் தலைவன் அன்புடையவனாக, பண்புடைவனாக, எந்த செயலையும் ஆராய்ந்து செய்பவனாக இருக்க வேண்டும் என்கிறார். அவ்வாறு ஆராய்ந்து செய்பவனிடம் எந்த ஒரு செயலையும் ஒப்படைக்க வேண்டும் என்கிறார்.

தன் வலிமை, பகைவர் வலிமை உணர்ந்து செயல்பட வேண்டும் (கு.471) என்று வலியுறுத்துகிறார். விளையாட்டாகக் கூட பிறரை இகழ்வது துன்பம் தரும். பண்புடையவர்களாக நடந்து கொள்ள வேண்டும் என்கிறார். தன் குடும்பத்தை உயர்த்துவேன் என்று அயராது உழைப்பவருக்குச் சேவை செய்ய தெய்வமே வரும் என (கு.1023) விளக்குகிறார். கடின உழைப்பு, தன்னம்பிக்கை முதலியவற்றுக்கு கடவுளை விட முக்கியத்துவம் தருகிறார். தெய்வத்தால் இயலாத காரியமாக இருந்தாலும் கடின உழைப்பினால் முடியும் என்று கூறுவதிலிருந்து மனிதன் கடின உழைப்பு, அயராத முயற்சி மீது எவ்வளவு நம்பிக்கை வைக்க வேண்டும் என்பது புலனாகும். கடின உழைப்பு, அயராத முயற்சி, நற்பண்பு, நன்னடத்தை, நல்லொழுக்கம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் தரும் வள்ளுவர் தீய ஒழுக்கத்தைக் கடிந்து கொள்ளவும் தவறவில்லை. விலைமகளை நாடுவது துன்பம் தரும். அறிவுடையவர் நாடுவதில்லை என்று 915 வது குறள் மூலமாக அறிவுறுத்துகிறார். மேலும் தன் மகனைச் சிறந்தவனாக வளர்ப்பதில் தந்தையின் பங்கு குறித்து (கு.61) கூறுகிறார். தந்தை மகனுக்கு ஆற்றும் உதவி அவனைக் கற்றோர் அவையில் முதன்மையானவனாக இருக்க செய்தல் என்கிறார். “சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே”[4] என்ற பொன்முடியார் பாடல் இங்கு எண்ணத்தக்கது. இவ்வாறு குடும்பத்தில் தலைவனின் உணர்வுநலன்களை விளக்குகிறார்.

**குடும்பத் தலைவி**

குடும்பத்தைப் பேணிக் காப்பவள் பெண். திருவள்ளுவர் குடும்பத்தை வழிநடத்தும் பெண்ணின் இயல்புகளைப் பல்வேறு இடங்களில் சுட்டிக்காட்டுகிறார்.

> “கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும், ….
>
> பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்”[5]

என்பதிலிருந்து பெண் என்பவள் அன்புடையவளாக நல்லொழுக்கம் உடையவளாக மென்மைத்தன்மை உடையவளாகப் பொறுமை உடையவளாகச் சுற்றத்தாரைப் பேணுபவளாக இருக்க வேண்டும் எனத் தலைவியின் பண்பு நலன்களை தொல்காப்பியர் கூறுகிறார். இல்லாள், மனையாள், மனைவி போன்ற சொற்களால் குடும்பத்துடன் உணர்வால் ஒன்றியவள் பெண் என்பதை அறியலாம். கற்பு என்னும் மனஉறுதி இல்லாளிடம் இருந்தால் அதை விட பெருமைமிக்கது உலகில் வேறு ஒன்றும் இல்லை என்று 54ஆவது குறளில் கூறுகிறார். மேலும் பெண் என்பவள் தன்னையும் தன் கணவனையும் தன் குடும்பப் பெருமைகளையும் காத்து நிற்பவள் என்று 56 ஆவது திருக்குறளில் பதிவு செய்கிறார். பெண்ணை திண்மை, மென்மை

உடையவளாகக் காட்டும் வள்ளுவர் இயற்கையைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் மிக்கவளாகவும் காட்டுகிறார். கடவுளை வணங்காமல் கணவனையே தெய்வமாக வணங்கும் பெண் சொன்னால் மழையும் பெய்யும் என்று ( குறள் 55) கூறுகிறார்.

இத்தகைய பெண்ணை விட பெருமைமிக்கது உலகில் வேறு எதுவும் இல்லை என்பதனை 'பெண்ணின் பெருந்தக்க யாவுள' என்கிறார். மேலும் தாயானவள் தன் மகனை ஈன்ற பொழுதை விட அவனைச் சான்றோன் என பிறர் பாராட்டும் போது மகிழ்ந்ததாகக் கூறுவதில் இருந்து பிள்ளையால் தாய்மை மகிழும் திறனை உணரலாம். இவ்வாறு தன் செயல்களால் குண நலன்களால் குடும்பத்துடன் உணர்வால் ஒன்றியவள் பெண் எனலாம்.

**பிள்ளைகள்**

இல்லற வாழ்வின் அன்புப் பரிசு பிள்ளைச்செல்வங்கள். கோடி கோடியாய் பொருள் இருந்தாலும் மக்கட் செல்வம் இல்லாதவர் வறியவரே ஆவார். பெறக்கூடிய பெருமைகளில் எல்லாம் முதன்மையானது நன்மக்களைப் பெறுதல் என்கிறார் வள்ளுவர். கவலை, கோபம், மன அழுத்தம் என எத்தகைய உணர்வுடன் இருந்தாலும் அனைத்தையும் கட்டுப்படுத்தி தன் வயப் படுத்தும் ஆற்றல் மழலைக்கு உண்டு. குழந்தைகளின் செல்லக் கைகளால் அளாவிய உணவு தேவர்கள் உண்ணும் அமிழ்தத்தை விட சுவையானது என்றும்(குறள் 64), தம் பிள்ளைகளின் மழலைச் சொல் கேளாதவரே குழல், யாழ் இசையினை இனிமையானது என்று கூறுவர் என்பதிலிருந்தும்(குறள் 66) பிள்ளை செல்வத்தால் கிடைக்கும் இன்ப உணர்வினை உணர்ந்து கொள்ளலாம். இத்தகைய சிறப்பு மிக்க பிள்ளைகள் எத்தகையவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் கூறத் தவறவில்லை. பிள்ளைகள் அறிவு உடையவர்களாகவும், பிறர் பழிக்கு இடம் கொடாதவர்களாகவும் இருக்க வேண்டும் என்று (குறள் 61, 62) கூறுகிறார்.

**முடிவுரை**

நல்லறிவு, நல்லொழுக்கம், நன்னடத்தை என நற்பண்புகளுக்கு பிறப்பிடமாக இருப்பது குடும்பமாகும். மனிதனை அறவழியில் சான்றோனாக வழிநடக்க செய்வதில் குடும்ப உணர்வு முக்கியப் பங்கு வகிக்கிறது. தந்தை, தாய், பிள்ளைகள் என குடும்ப உறவானது உணர்வினால் பிணைக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம். குடும்ப உணர்வு மனிதனிடம் இல்லை என்றால் மனிதன் மனிதனாக வாழ இயலாது. வான்புகழ் வள்ளுவரும் குடும்ப உணர்வுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் குறித்து இங்கு ஆராயப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. கொன்றை வேந்தன், பக்கம் 4.

2. குடும்ப விளக்கு, பக்கம் 5.

3. மணிமேகலை, பக்கம் 148.

4. புறநானூறு, பக்கம் 303.

5. தொல்காப்பியம், பக்கம் 446.

**துணைநூல் பட்டியல்**

1. குமாரசுவாமி பிள்ளை. எஸ் தஞ்சை, கொன்றை வேந்தன், பண்டிதமித்ரயந்திரச்சாலை, சென்னை, பதிப்பு 1906.

2. சுப்பிரமணியன். ச.வே., தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108, எட்டாம் பதிப்பு 2006.

3. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், குடும்ப விளக்கு, பாரி நிலையம், சென்னை-1, இரண்டாம் பதிப்பு1960.

4. புலியூர்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை-14, மூன்றாம் பதிப்பு 2010.

5. நாவலர் பண்டிதர் நா.மு.வேங்கடசாமி நாட்டார் வித்வான், மணிமேகலை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 18.மூன்றாம் பதிப்பு1994.